**டவர் மண்டப அரங்க மன்றம் - 2023**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

டவர் மண்டப அரங்க மன்றத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, டவர் மண்டப அரங்க மன்றத்தின் நிதிக்கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுதல் மற்றும் மோசடிகள் அல்லது தவறான விடயங்களால் நிகழும் அளவிட முடியுமான போலியான அறிக்கைகளைத் தவிர்த்து நிதி அறிக்கைகளைத் தயாரிக்கத் தகுந்த வகையில் தேவையான உள்ளக நிர்வாகக் கட்டமைப்பை பேணுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது, மன்றத்தை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும் என்பதுடன், முகாமைத்துவம் மன்றத்தை கலைப்பதற்கு எண்ணுமேயானால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாத சந்தர்ப்பத்தில் செயற்பாட்டை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமேயானால் அன்றி தொடர் இயங்கும் நிலைப்பாட்டின் அடிப்படையில் கணக்குகளைப் பேணுவதும் மன்றத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டுக்குரிய விடயங்களை தெளிவு படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடற் செயற்பாடு சம்பந்தமாக மீளாய்வுப் பொறுப்பு, அவை தொடர்பான தரப்பினர்களால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், மன்றத்தின் வருடாந்த மற்றும் இடைக்கால நிதி அறிக்கைகள் தயாரிக்கப் படுவதற்கு ஏற்ற விதத்தில் சுய வருமாம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்மந்தமாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகம் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது நிருவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள்

| | குறித்த நியமத் தொடர்புகளுடன் கூடிய இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் 47 (ஆ) பந்திக்கு முரணாக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட முன்னைய வருடங்களுக்குரிய ரூபா 97,976,488 ஆன பிழையை சரி செய்வதற்கான ஆரம்ப மீதிகளை மீண்டும் வெளிப்படுத்தாமல் முன்னைய வருட சீராக்கள் கணக்கில் மாத்திரம் | எதிர்காலத்தில் நியமம் இலக்கம் 03 இன் 47(ஆ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நியமங்களின் விதிமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கிடப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வான்டு ஆரம்பத்தில் மூலதன நன்கொடை கணக்குகள் மீதி ரூபா 16,476,488 வினால் கூடுதலாகவும், திரண்ட பெறுமானத் தேய்வு கணக்கின் மீதி ரூபா 81,500,000 வால் மற்றும் திரண்டு பற்றாக்குறை ரூபா 65,023,512 வால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 14(அ) மற்றும் (ஆ) பந்திகளுக்கு முரணாக நிறைவு செய்யப்படாத நிலையில் காணப்படுகின்ற டவர் மண்டப நூதன சாலையில் மேம்படுத்தல் மேற்கொள்ளும் பணிக்குரிய மீளாய் வாண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,410,800 ஆன நடை பெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் கணக்கிடப்படுவதற்கு பதிலாக கட்டிடங்கள் கணக்கிற்கு மூலதனமாக்கப்பட்டிருந்தது. | வேலைகள் நிறைவடைந்திருந்ததனால் மூலனமாக்கப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் குறிப்பிட்ட காலத்தின் கலவத்தான் ஒன்று திருத்த வேலை இடம்பெற்ற பிரதேசத்தில் சேதங்களை ஏற்படுத்தியதால் மீண்டும் அந்தப் பிரதேசத்தை திருத்துவதற்கு நீண்ட காலம் ஒன்று எடுத்து இருந்ததாக. | கணக்காய்வினால் 2024 ஏப்ரல் 18 ஆம் தேதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசீலனை ஒன்றின் போது உரிய பணிகள் மேலும் இடம்பெற்றுக் கொண்டிருந்ததுடன் இந்த மறுமொழி பொய்யானதுஒன்றாகும். நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமம் 07 இன் 84 ஆவது பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டில் நீக்கப்பட்ட மோட்டார் வாகனத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 690,773 ஆன நன்மையை கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | அந்த நீக்கப்பட்ட வாகனத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற தொகையை திறைசேரிக்கு மீண்டும் அனுப்ப வேண்டியிருந்தமையால் அந்த இலாபம் செலுத்தப்பட வேண்டிய தொகையொன்றாக கணக்கிடப்பட்டிருந்தது. | நியமங்களின் விதிமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் 44 ஆவது பந்தியின் பிரகாரம் பரிமாற்றத்திற்கு உட்படாத கொடுக்கல் வாங்கல்களில் மூலம் கிடைக்கப்பெறும் வருவாய் வருமானத்திற்கு அடையாளப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்று இருந்த மூலதன நன்கொடை ரூபா 24,490,000 இல் ரூபா 24,305,703 ஆன தொகை தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமத்தின் பிரகாரம் சரியான கணக்கிடுதலை தயாரிப்பதற்கு குறிப்பிடப்பட்டுக் கொண்டது. | நியமங்களின் விதிமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய வருடத்தினுள் கிடைக்கப் பெற்றிருந்த மூலதன நன்கொடை தொடர்பாக மேற்குறித்த நியமத்தின் 116 இல் இருந்து 125 வரையிலான நிலையற்ற | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமத்தின் பிரகாரம் சரியான கணக்கிடுதலை | நியமங்களின் விதிமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாததனால் மேலும் வருவாய்களாக அடையாளப்படுத்தப்பட வேண்டிய ரூபா 195,336,663 ஆன அரச மூலதன நன்கொடையாக உரிமம் மாற்றமடையும் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | தயாரிப்பதற்கு குறிப்பிடப்பட்டுக் கொண்டது. | வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமம் 02 இன் 09ஆம் பந்தியின் பிரகாரம் கைப்பற்றப்பட்ட திகதியிலிருந்து காலாவதியாவதற்கு எஞ்சியுள்ள காலம் 03 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான முதலீடுகள், காசு பாய்ச்சல் கூற்றில் மற்றும் நிதி நிலைமை கூற்றில் காசு மற்றும் காசிற்கு சமமான திரவத்தன்மையிலான சொத்துக்களாக காட்டப்பட வேண்டிய போதிலும், மூன்று மாதத்திற்குள் காலாவதியாவதற்குள்ள ரூபா 22,000,000 ஆன நிலையான வைப்புக்கள் 03இன் பெறுமதி காசு மற்றும் அதற்கு சமமானதாக காட்டப்படுவதற்கு பதிலாக நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் வருடத்தினுள் சீர் செய்து 2023 ஆம் வருடத்தை மீண்டும் தயாரிப்பதற்கு (Restated) நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் 03 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான முதலீடுகள், காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் திரவத்தன்மையிலான சொத்துக்களாக காட்டப்பட வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கட்டிடமாக கணக்கிடப்பட வேண்டிய தொகை ரூபா 4,738,153 ஆனபோதிலும் அது ரூபா 5,110,594 ஆக கணக்கிடப்பட்டதன் காரணமாக கட்டிடம் ரூபா 372,441 ஆள் கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது. | 2024 ஆம் வருடத்தினுள் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு சரி செய்யப்படும். | கட்டத்தின் பெறுமதியை சரியாக அடையாளம் கண்டு கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 14,844,240 ஆன பற்றாக்குறை ரூபா 63,523,296 ஆக ரூபா 48,679,056 கூடுதலாக காசு பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் வருடத்திற்கான ரூபா 96,486,261 ஆன பெறுமானத் தேய்வு செலவு ரூபா 96,533,261 ஆக ரூபா 47,000 வால் கூடுதலாக காட்டப்பட்டதோடு வருடத்தினுள் செலுத்தப்பட்ட ரூபாய் 1,216,143 ஆன பணிக்கொடை பெறுமதி ரூபா 973,483 ஆக ரூபா 242,660 வால் குறைவாக காட்டப்பட்டதன் காரணமாக காசு பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு பாய்ச்சல் சரியற்றதாக அவதானிக்கப்பட்டது. | சரி செய்வதற்கு குறிப்பிடப்பட்டுக் கொண்டது. | காசு பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்குள் பணமாக கிடைக்கப்பெற்ற ரூபா 41,480,317 ஆன முதலீட்டு வட்டி ரூபா 43,833,685 ஆக ரூபா 2,353,368 கூடுதலாகவும் ரூபா 34,220,807 நிலையான சொத்துக்கள் கைப்பற்றப்படுதல் ரூபா 47,169,426 ஆக ரூபா 12,948,619 கூடுதலாகவும் காட்டப்பட்டதனால் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு பாய்ச்சல் சரியற்றதாக அவதானிக்கப்பட்டது. | காசு பாய்ச்சல் கூற்றினுள் பணமாக கிடைக்கப்பெற்ற மொத்த வட்டி ரூபா 43,833,685 ஆக காட்டப்பட்டிருந்ததுடன் அதில் முதலீடு மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2024 ஆம் வருடத்தில் சரி செய்து 2023 ஆம் வருடத்தில் மீண்டும் தயாரிப்பதற்கு (Restated) நடவடிக்கை எடுக்கப்படும். | காசு பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6. பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட 05 வருடங்களையும் விட அதிகமான காலத்திலிருந்து காணப்பட்டு வருகின்ற ரூபா 1,203,583 ஆன கடன் பட்டோர் மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த 05 வருடங்களையும் விட அதிக காலமான மீதிகள் தொடர்பாக 2023 ஆம் வருடஇறுதியில் இடம் பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் எதிர்வரும் குழு கூட்டத்திற்கு அந்த மீதிகளின் விபரங்களை சமர்ப்பிப்பதாக ஆலோசனை பெறப்பட்டது. அதன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு குறிப்பிடப்பட்டுக் கொண்டது. | நீண்ட காலத்திலிருந்து காணப்பட்டு வருகின்ற கடன் பட்டோர் மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.2 சேலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 டிசம்பர் 31 ஆம் தேதியில் 05 வருடங்களை விட அதிக காலம் கடந்திருந்த ஒப்பந்த பிடி பணமான ரூபா 1,786,008 ஆன தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் சமர்ப்பித்து அந்த அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | செலுத்தப்பட வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு அல்லது வருமானமாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 14,844,240 ஆன பற்றாக் குறையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 80,792,883 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 65,948,643 ஆன விருத்தியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த விருத்திக்கு மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 49,724,977 ஆலும், பிற்போடப்பட்ட வருமானம் (மூலதன நன்கொடை) ரூபா 48,679,055 ஆலும் வருமானத்தின் கூட்டு மொத்தம் ரூபா 98,404,032 ஆல் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சவ்சிரிப்பாய கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள நிலப்பகுதியை மன்றத்திற்கு சுவிகரிப்பதற்கு உரிய 1980 அக்டோபர் 08 ஆம் திகதிய விசேட கொடுப்பனவு பத்திரத்தின் விதிமுறைகளின் பிரகாரம், இந்த காணி மற்றும் அங்கு அமைந்துள்ள கட்டிடம் தேசிய நாடக நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தலுக்கு தேவையான பணிகளுக்காக அன்றி வேறு பணிகளுக்காக ஈடுபடுத்தக்கூடாத போதிலும் அந்த பணிகளுக்காக ஈடுபடுத்த முடியாவிட்டால் மீண்டும் அரசுக்கு உரித்தாக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மன்றத்திற்கு உரிய சவ்சிரிப்பாய கட்டிடம் மற்றும் அங்கு அமைந்துள்ள நிலப் பகுதி 1986 மே 15ஆம் திகதியில் இருந்து நிர்மான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்கு 02 சந்தர்ப்பங்களில் 30 வருடங்களின்படி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் முறையான அங்கீகாரம் இன்றி இரண்டாவது ஒப்பந்தத்திற்கும் முனைந்திருந்தனர். 2016 மே 14 ஆம் திகதி குத்தகை கால எல்லை நிறைவடைந்த பின்னரும் வாடகை செலுத்தப்படாமல் மற்றும் 2023 ஜனவரி 04 ஆம் திகதி பிரதமரின் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போது மற்றும் 2024 ஜனவரி 30 ஆம் திகதி பிரதமரின் செயலாளர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போதும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் கட்டணத்தை செலுத்துவதற்கு, புதிய குத்தகை ஒப்பந்தத்திற்கு முனைவதற்கு அல்லது அந்த அலுவலகத்தை அதிகார சபைக்கு உரிய கட்டிடத்திற்கு உடனடியாக நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமல், கட்டிடத்திலேயே தரித்து இருக்கப்பட்டிருந்தது. | அனைத்து கலந்துரையாடல்களும் தோல்வி அடைந்திருந்ததுடன் இந்த கட்டிடத்திலிருந்து நிர்மான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையை நீக்குவதற்காக மேதகு பிரதம மந்திரியின் மற்றும் மேதகு அமைச்சரின் கையொப்பங்களுடன் அமைச்சரவை பத்திரமொன்றின் அங்கீகாரத்திற்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2024 மே 27ஆம் திகதிய அப/24/1286/620/022 ஆம் இலக்க ஒன்றிணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2024 ஜூலை 09ஆம் தேதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் பிரகாரம் கட்டிடம் மீண்டும் மன்றத்துக்கு சுவீகரித்துக் கொள்வதற்கு மற்றும் நிலுவை வாடகைகளை அறவிட்டுக் கொள்வதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மன்றத்தினால் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட குத்தகை ஒப்பந்தத்தில், குத்தகைதாரர்களுக்கு முழுமையான குத்தகை ஆதனம் அல்லது அதில் ஒரு பகுதியை இடைக்கால குத்தகைக்கு வழங்குவதற்கு அதிகாரம் உள்ளதென்று மன்றத்திற்கு தீங்கு | அனைத்து கலந்துரையாடல்களும் தோல்வி அடைந்திருந்ததுடன் இந்த கட்டிடத்திலிருந்து நிர்மான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையை நீக்குவதற்காக மேதகு பிரதம மந்திரியின் மற்றும் மேதகு | ஒப்பந்தங்களுக்கு முற்படும்போது மன்றத்துக்கு தீங்கு விளைவிக்காத வண்ணம் நிபந்தனைகளை உள்ளடக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| விளைவிக்க கூடிய நிபந்தனை ஒன்றை உள்ளடக்கியதன் காரணமாக இந்த அதிகார சபையினால் 2017 அடி பரப்பளவு உள்ள பகுதி ஒன்று 2021 ஜூலை 01ஆம் திகதியிலிருந்து 2023 ஜூன் 30 ஆம் தேதி வரையான காலப் பகுதிக்காக ரூபா 227,000 மாதாந்த வாடகைக்கு நிர்மாண பாதுகாப்பு நிதியத்திற்கு (CGF) இடைக்கால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் கேட்போர் கூடமும் வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. | அமைச்சரின் கையொப்பங்களுடன் அமைச்சரவை பத்திரமொன்றின் அங்கீகாரத்திற்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆரம்ப மதிப்பீடு ரூபா 3,914,827 ஆன சரஸவிப்பாயவின் பின்பகுதியில் அமைந்துள்ள கட்டிடத்தை திருத்துவதற்கு இரண்டாவது முறை அதிகரிக்கப்பட்ட மதிப்பீடான ரூபா 7,219,643 க்கு கட்டிட திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 5.4.4 ஆம் பந்திக்கு முரணாக நூற்றுக்கு 30 ஆன முற்பன வரையறையை விஞ்சி நூற்றுக்கு 89 ஆன ரூபா 6,461,374 தொகையான காப்புப்பினையொன்று பெற்றுக் கொள்ளப்படாமல் செலுத்தப்பட்டிருந்தது. அதன் நிறைவடைந்த வேலைகளின் பெறுமதி ரூபா 4,738,154 ஆக மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 1,723,220 ஆன தொகை 09 மாதங்களை விட அதிக காலத்தின் பின்னர் 2024 ஜூலை மாதத்திலே அறவிடப்பட்டிருந்தது. | 2022 ஆம் வருடத்தில் டொலர் பற்றாக்குறையின் காரணமாக பொருள் இறக்குமதிகள் வரையறுக்கப்பட்டதன் விளைவாக சந்தையில் நிர்மாண பொருட்களின் விலை 200% அளவில் உயர்ந்திருந்ததன் காரணமாக இந்த நிலைமை உருவாகியிருந்தது. அரச நிறுவனம் ஒன்றான கட்டிட திணைக்களத்திற்கு இந்த திருத்த வேலைகளுக்காக கையளிக்கப்பட்டதாக தாழ்மையுடன் குறிப்பிடுகிறேன். | பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| டவர் மண்டபத்தின் பகுதி ஒன்றை நூதனசாலை ஒன்றாக மேம்படுத்தும் பணி ஒன்றிற்காக மேல் மாகாண சபை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 1,410,800 ஆன மதிப்பீட்டுக்கு 2023 டிசம்பர் 04ஆம் திகதி விலை மனு வழங்கப்பட்டு மொத்த மதிப்பீட்டுத் தொகையில் நூற்றுக்கு 5 ஆன பிடி பணத்தை கழித்துக் கொண்டு ரூபா 1,340,260 ஆன தொகையையும் 2023 டிசம்பர் 29ஆம் தேதி அதிகார | பணி ஆரம்பத்திலேயே மொத்த தொகையையும் விடுவிக்குமாறு மேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் எங்களால் அந்த பணம் விடுவிக்கப்படாதிருந்ததுடன் சிறிய வேலை பகுதி ஒன்று மாத்திரம் எஞ்சி இருந்த நிலையில் 2023.12.31 ஆம் திகதியில் காசோலை வழங்கப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் 2024 ஏப்ரல் 18 ஆம் தேதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசீலனை ஒன்றின் போது உரிய பணிகள் மேலும் இடம்பெற்றுக் கொண்டிருந்ததுடன் இந்த மறுமொழி பொய்யானதுஒன்றாகும். சான்றுதிப்படுத்தப்பட்டிருந்த வேலையின் பெறுமதியின் |

| | | |
|---|---|---|
| சபைக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் விருப்பத்தை தெரிவிக்கும் கடிதத்தின் பிரகாரம் இந்த பணியை 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வினால் கள பரிசீலனை மேற்கொண்ட போது 2024 ஏப்ரல் 18 ஆம் திகதியிலும் குறித்த பணிகள் நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை. | அதன் பிற் காலத்தில் களவத்தான் ஒன்று இந்த பிரதேசத்தில் சேதம் விளைவித்ததன் காரணமாக மீண்டும் அந்த பிரதேசத்தை திருத்துவதற்கு நீண்ட காலம் ஒன்று செலவாகி இருந்தது. | பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2023ஆம் வருடத்தின் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் உரிய செயலாற்றல் குறிக்காட்டியை அடையாளம் கண்டு இல்லாத அந்த செயற்பாடுகளுக்கு உரிய ஆரம்ப செயலாற்றல் குறிகாட்டிற்கு (Key Performance Indicators) இணங்கும் வகையில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாதிருத்தல் காரணமாக அந்த செயற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கம் நிறைவேற்றப்பட்டு உள்ளதா என்பதை நேரடியாக அடையாள காண்பதற்கு முடியாது இருந்தது. | 2024 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது அதை சரியாக மேற்கொள்வதற்கு குறிப்பிடப்பட்டுள்ளதாக. | செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள. ஒவ்வொரு செயல் நடவடிக்கைகளுக்குரிய செயலாற்றல் குறிக்காட்டியை (Key Performance Indicators) அடையாளம் கண்டு, அதற்கு இணங்கும் வகையில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |